ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர  ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாசார்ய பரம்பராகத மூலாம்னாய ஸர்வக்ஞபீட

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி

## ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்

நெ.1, சாலைத்தெரு, காஞ்சீபுரம்–631 502.



ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் 68-ஆவது பீடாதிபதிகளாகத் திகழ்ந்த

**ஜகத்குரு ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள் அவர்களுக்குக்**

# கோடி அர்ச்சனை

அன்புடையீர்,

நடமாடும் தெய்வமெனக் கற்றோரும் மற்றோரும் போற்ற நம்மிடையே ஜீவன் முக்தராக வாழ்ந்து அருள்மணம் பரப்பி வந்த ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவர்கள் ஸ்தூல சரீரம் துறந்து சூக்ஷ்ம சரீரத்துடன் மகத்தான அருளைப் பொழிந்து கொண்டு அதிஷ்டானத்தில் நித்ய ஸாந்நித்யத்துடன் உறைகிறார். பக்தர்கள் அனைவரின் ப்ரார்த்தனைகளையும் கேட்கிறார். அனுக்ரஹிக்கிறார். வேண்டுவார் வேண்டுவன வேண்டும் வண்ணம் நிறைவேற்றி வைக்கிறார்.

நிலையான ஆனந்தத்தைத் தரும் குரு தத்துவம் ஈச்வர தத்துவத்தைக் காட்டிலும் உயர்ந்தது. 2500 வருடங்களாகத் தொடர்ந்து அருளாட்சி செய்து வரும் குரு பரம்பரையோடு திகழ்வதும் எல்லா திசைகளிலும் ஞான ஒளி பரப்பி அஞ்ஞான இருளகற்றுவதுமான ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் 68-ஆவது பீடாதிபதியாகத் திகழ்ந்தவர் ஜகத்குரு **ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி மஹா ஸ்வாமிகள்.** வேத ரிஷிகளின் போதத்தை பேதம் நீங்க உரைத்த ஸ்ரீ ஆதிசங்கரரின் நவாவதாரம் இவர்.

தஞ்சமென வந்தோர்க்கு அஞ்சேல் எனப் பஞ்சமின்றி அருள் பொழியும் ஞான வள்ளல் ஸ்ரீ மஹாஸ்வாமிகளுக்கு நிகழும் ஸர்வதாரி வருஷம் மார்கழி மாதம் 8-ஆம் நாள் (23-12-2008) ஆராதனை தினம் முதல் ஸ்ரீஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் பூர்ண அனுக்ரஹத்துடன் கோடி அர்ச்சனை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஸஹஸ்ரநாம அர்ச்சனை நன்கொடைக் காணிக்கை ரூ.300.00/- பங்குபெறும் அன்பர்களுக்கு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உருவம் பதித்த டாலர், லாமினேட் செய்யப்பட்ட ஸ்ரீ மஹாஸ்வாமிகள் படம் முதலியன மற்ற பிரஸாதங்களுடன் அளிக்கப்படும். கோடி அர்ச்சனையில் செலவு போக எஞ்சும் தொகை வேத ரக்ஷணத்திற்காகப் பயன்படுத்தப்படும்.

இந்தியன் வங்கியின் குறிப்பிட்ட எல்லா கிளைகளிலும் கோடி அர்ச்சனைக்கான நன்கொடைக் காணிக்கையைக் கட்டணமின்றி செலுத்தலாம். ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீட பக்தர்களும் மற்றவர்களும் கோடி அர்ச்சனையில் பங்கு கொண்டு குருவருள் பெற்று எல்லா நலன்களும் பெற வேண்டுமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

என்றும் ஸ்ரீமடத்தின் பணியில்

P. Neelakantan

**P. நீலகண்ட ஐயர்,**

ஸ்ரீகார்யம் & ஏஜெண்ட்



கோடி அர்ச்சனை காணிக்கை ரசீதுகளை குறிப்பிட்ட இந்தியன் வங்கிக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

इंडियन बैंक Indian Bank

கிளை மேலாளரை அணுகவும்.

ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர  ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர